**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: STC.518/2022**
**Prosecution Witnesses: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : வைரக்காளை (பவர் ஏஜெண்ட் ) | Caste | : |
| Father Name/ Husband Name | : நிறைகுளம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(மனுதாரர் ஆஜர். எதிர்மனுதார ஆஜர் இல்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(24.10.2025)**
**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும். 04.01.2022ம் தேதியிட்ட பெடரல் பேங்க் லிமிடட் விருதுநகர் காசோலை அசல் ம.சா.ஆ.1 ஆகவும், 05.01.2022 ம் தேதி புகார்தார் தனது வங்கியான கனரா வங்கி சிவரக்கோட்டை கிளையில் காசோலையை செலுத்தியதற்கான செலான் நகல் (அதன் செல்லும் தன்மை குறித்து எதிரி தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) ம.சா.ஆ.2 ஆகவும், 07.01.2022ம் தேதி கனரா வங்கி சிவரக்கோட்டை கிளையில் போதிய பணம் இல்லை என்ற காரணத்துடன் திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ.3 ஆகவும், 20.01.2022ம் தேதி புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.4 ஆகவும், அறிவிப்பு சார்பு செய்ததற்கான கணினி சான்று மற்றும் அஞ்சலக ரசீது அசல் ம.சா.ஆ.5 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.